Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 367/2025 PW-2**

Name : கணேசன்
Father / Husband name : லட்சுமிபதி
Village : பிரம்மதேசம்
Age : 44
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.03.2026

A1 to A4 present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பிரம்மதேசம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 19.03.2025 அன்று ஒலக்கூர் காவல் நிலையத்தில் த.கா பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் சசிக்குமார் அவர்களின் தலைமையில் சிறப்பு உதவி ஆய்வாளர் கலைமணி மற்றும் த.கா. செந்தில்குமார் மற்றும் 845 மு.நி.கா. பாரதி ஆகியோர்கள் ஒலக்கூர் காவல் நிலைய வாகனத்தில் TN 32 G 0601 என்ற சுமோ வாகனத்தில் கடவம்பாக்கம் கிராமத்திலுள்ள ஆற்றிற்கு காலை 04.30 மணிக்கு சென்றிருந்தோம். அப்போது எதிரி கடவம்பாக்கம் ஆற்றிலிருந்து TN 31 BS 9995 டிப்பர் லாரியை ஆஜர் எதிரி சிவா என்பவர் ஓட்டிவந்தார். TN 32 AD 3163 டிப்பர் லாரியை ஆஜர் எதிரி மாதவன் என்பவர் ஓட்டிவந்தார். மேற்படி வாகனத்தில் மாதவன் என்பவருடன் ஆஜர் சரவணன் என்பவர் வந்தார். TN 18 L 2979 டிப்பர் லாரியை ஆஜர் எதிரி செல்வம் என்பவர் ஓட்டிவந்தார். மேற்படி லாரியை நாங்கள் நிறுத்த முற்பட்டபோது மேற்படி லாரிகளை நிறுத்திவிட்டு ஆஜர் எதிரிகள் அனைவரும் தப்பி ஓட முயற்சி செய்தார்கள். நாங்கள் அவர்களை மடக்கிபிடித்து உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர்களின் பெயர், முகவரியை சொன்னார்கள். சிவா ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்தபோது சுமார் 2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. செல்வம் ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்தபோது சுமார் 1 யூனிட் ஆற்று மணல் இருந்தது.

மாதவன் ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்தபோது சுமார் 2 யூனிட் ஆற்று மணல் இருந்தது. உதவி ஆய்வாளர் விசாரித்தபோது மேற்படி மணலை எடுத்துவர எவ்வித அரசு அனுமதியும் இல்லை என்பது தெரியவந்தது. காலை 05.15 மணிக்கு சம்பவயிடத்தில் எதிரிகளை கைது செய்து மேற்படி மூன்று டிப்பர் லாரிகளை என் முன்பும் த.கா 1845 செந்தில்குமார் முன்பும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தும் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இரண்டாவது கையொப்பம் சாட்சி செந்தில்குமார் என்வருடையது. **மேற்படி கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து காலை 06.30 மணிக்கு உதவி ஆய்வாளர் ஒலக்கூர் காவல் நிலையக்குற்ற எண் 57/2025, U/s 303(2) BNS ன் கீழ்வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

( வழக்கின் தடயப்பொருட்களான மூன்று டிப்பர் லாரிகளின் முறையான புகைப்படங்கள் சமர்பிக்காததால் 1, 2, 4 எதிரிகள் இடைக்காலமாக பெற்றுச்சென்ற டிப்பர் லாரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.